
62-5

ஸ்ரீ குரு

தட்சிணாமூர்த்தி சுவாமிகள் அறக்கட்டளை



வெளியீடு :

ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள்
அறக்கட்டளை
திருவண்ணாமலை.

62-5





625

சிவமயம்

திருவருணை நாயகன்தன் திருவருளால் அவதரித்து,
திருமேனியெலாம்
திருநீறு விளங்கிடவே, திருத்தலங்கள் சேவித்து,
அருட்செயல்கள் பல புரிந்து
திருவாரூர் மடப்புரத்தில் அருட்ஜோதிதனில் கலந்த
குருமணியே, நிந்தன்
திருவடிகள் போற்றி நின்றேம் ! அருள்செய்து
எமைக் காப்பாய்.

— எஸ். கேசவபாரதி

உ
சிவமயம்

அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண்ணார் அமுத கடலே போற்றி

ஸ்ரீ குருதட்சிணாமூர்த்தி சுவாமிகள்
திருவடிகளே சரணம்

ஸ்ரீ குருதட்சிணாமூர்த்தி சுவாமிகள்
அறக்கட்டளை

பதிவு எண் 117/94

ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்.

வெளியீடு
ஸ்ரீ குருதட்சிணாமூர்த்தி சுவாமிகள் அறக்கட்டளை
திருவண்ணாமலை

நிர்வாக அறங்காவலர்
திரு. முத்து பழனியப்பன் (எ)
கு. வெ. பழ. வேலாயுதம் செட்டியார் ஓயாமடம்
10/B ஆணைகட்டி தெரு திருவண்ணாமலை

ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள் அறக்கட்டளை

அறக்கட்டளை தோற்றம், குறிக்கோள் மற்றும் வேண்டுகோள்!

ஸ்ரீகுரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள் சிறப்பும் மேன்மையும்

திரிசிரபுரத்துக்கு அருகாமையில் கீழாலத்தூர் என்னும் ஊரில் ஸ்ரீ அண்ணாமலையாரின் அருட்கடாட்சத்தால் அவதரித்தவர் ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள், சுவாமிகள் குழந்தை பருவத்தில் பேச்சற்ற நிலையில் இறைஞானத்தில் மூழ்கி இருந்தபோது இறைவனாம் அண்ணாமலையாரே துறவி வேடம் கொண்டு அவர்இல்லம் நாடிச் சென்று சுவாமிகளை ஞான வார்த்தைகள் பகருமாறு செய்து, ஆட்கொண்டு சுவாமிகளை சித்த புருஷராக அடையாளம் காட்டினார். அருணாசலம் என்பதே அவரது பிள்ளைத் திருநாமம் ஆகும். சுவாமிகள் சித்த புருஷரும், ஜீவன் முக்தரும் ஆவார். சுவாமிகள் அவதூதராகவும், முழுநீறுபூசி மேனியராகவும் திகழ்ந்து சதாகாலமும் ஞானநிஷ்டையில் இருந்த தபோதனர். ஜீவித காலத்தில் அநேக அருட்செயல்கள் புரிந்த மகான். திருவாரூர் மடப்புரத்தில் ஆவணி உத்திர நன்னாளில் ஜீவசமாதி அடைந்தவர். சின்முத்திரைகாட்டி ஞானநிலையில் இருந்ததால் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகள் என அழைக்கப்பட்டவர் ஆவார்.

2) எண்ணமும் தோற்றமும்

புகழ்மிகுந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் பனையப்பட்டி கிராமத்தில் ஸ்ரீஅண்ணாமலையாரை வழிபடு கடவுளாகக் கொண்ட நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் தோன்றியவர் முத்து பழனியப்பன் என்கிற கு.வெ. பழ. வேலாயுதம் செட்டியார். இவர் அண்ணாமலையாரால் அழைக்கப்பட்டு திருவண்ணாமலை

சேர்ந்து தற்போது ஓயாமடத்தில் இருந்து வருபவர். இவர் அணி அண்ணாமலை பிரதோஷ வழிபாட்டு குழு தலைவராக இருந்து வருபவர். இவருக்கு ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகளின்பால் மிகுந்த ஈடுபாடு சுவாமிகளை தனது மானசீக குருவாக கொண்டு வழிபாடு செய்து வருவபவர். இவர் 1972'73 ஆம் ஆண்டில் திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிப்படி வியாபார நிமித்தம் காரணமாக அந்தமான் செல்ல நேர்ந்தது. இவர் சுவாமிகளின்பால் கொண்ட பற்று மற்றும் பக்தியின் காரணமாக அந்தமான் போர்ட் பிளையரில் சுவாமிகள் சித்தி அடைந்த ஆவணி உத்திர நன்னாளில் சுவாமிகளின் படம் பெரிதாக அமைத்து சிறப்பாக 'குருபூசை'நடத்திய பெருந்தகையர் ஆவார். சுவாமிகள் ஸ்ரீ அண்ணாமலையார் அருளால் அவதரித்து அவரால் ஆட்கொள்ளப்பட்ட சித்த புருஷர் என்பதால், ஞானபூமியாம் திருவண்ணாமலையின் கண் சுவாமிகளுக்கு ஓர் ஆலயம் அமைக்க இவருக்கு திருவருள் எண்ணம் உதித்தது. எழுபது வயது கடந்த நிலையிலும் தமது எண்ணத்தை செயலாக்க திண்ணிய நெஞ்சினராய் காலம் கனிய காத்திருந்தார். சுவாமிகளின்பால் மிக்க ஈடுபாடு உடையோர் பலர் இவரது எண்ணத்தை செயலாக்க இவருடன் இணைந்தனர். திருவருளாலும் குருவருளாலும் திருவண்ணாமலை கிரிவலம் சாலையில் ஆஞ்சனேயர் கோவில் அருகே சுவாமிகளின் ஆலயம் அமைக்க தக்கதொரு இடம் அமைந்தது. சுவாமிகளின் ஆலயம் அமைப்பதையே தனது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட திரு.கு.வெ. பழ. வேலாயுதம் செட்டியாரை நிர்வாக அறங்காவலராக கொண்ட 12 உறுப்பினர் அடங்கிய அறக்கட்டளை அமைக்கப்பட்டு சமீபத்தில் பதிவு செய்யப்பட்டது.

3. குறிக்கோள்

அறக்கட்டளையின் சார்பில் சுவாமிகளுக்கு சிறப்பான ஆலயம் அமைக்கவும் அதில் தியான மண்டபம் ஒன்று அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சுவாமிகள் ஆலயத்தில் தினசரி வழிபாடு, வியாழக்கிழமை தினத்தில் சிறப்பு வழிபாடு,

சுவாமிகள் சித்தி அடைந்த ஆவணிஉத்திர நன்னாளில் குருபூசை முதலியன நடத்தப்பெறஉள்ளது. அறக்கட்டளை சார்பில் கல்விபணி, பள்ளி பிள்ளைகள் தங்கி படிக்க வசதி, அன்னதான பணி முதலிய அறப்பணிகள் செய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

4. வேண்டுகோள்.

சுவாமிகள் ஆலயம் அமைக்கவும், அறக்கட்டளை சார்பில் பூசைகள் வழிபாடுகள் மற்றும் அறப்பணிகள் செய்திடவும் அருள் உள்ளம் படைத்த அனைவரின் ஒத்துழைப்பும் நல்லாதரவும் தேவைப்படுகிறது. மகத்தான இப்பணியில் தங்களை ஈடுபடுத்தி கொள்பவர்கள் திருவருளாலும் குருவருளாலும் இம்மை நலமும், மறுமை நலமும் வாய்க்கப்பெறுவர் என்பது திண்ணம். சுவாமிகளின் அருள் ஆலயம் அமைக்கவும், இதர பணிகள் சிறப்புற நடந்தேறவும், இயன்ற பொருள்உதவி நல்கி குருவருள் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

திருவண்ணாமலை — *இங்ஙனம்*

நாள் : 5-3-95 — *ஸ்ரீ குருதட்சிணாமூர்த்தி சுவாமிகள் அறக்கட்டளை*

ஸ்ரீகுரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள் திவ்ய சரித சுருக்கம்

திரிசிரபுத்துக்கு அருகில் கீழாலத்தூர் என்னும் பெயர் பெற்ற சிற்றூரின் கண், சற்றேறக் குறைய இருநூறு வருடங்களுக்கு முன் கார்காத்த வேளாளர் மரபில் , கல்வி அறிவு ஒழுக்கங்களிலும் , குரு லிங்க சங்கம பக்தியிலும் சிறப்புற்ற சிவசிதம்பரம் பிள்ளை என்பார் ஒருவர் இருந்தனர். அவரும் அன்னார் மனைவியாகிய மீனாம்பிகை அம்மையாரும் ஒன்றுபட்ட கருத்தும் அன்பும் உடையராய் நெறி வழுவாது இல்லற தர்மத்தை இனிதே இயற்றி வந்தனர்.

மீனாம்பிகை அம்மையார் வயிறு வாய்த்து, திங்கள் பத்தும் சென்ற பின்னர் உத்தமமாகிய சுபதினத்தில் , வலம்புரி ஈன்ற நல்முத்தென ஓர் புத்திரனைப் பெற்றனர். சிவசிதம்பரம் பிள்ளை பெரு மகிழ்ச்சியுடன் குழந்தைக்குச் செய்ய வேண்டிய ஜாதக கன்மங்களை முறையாகச் செய்து ஸ்ரீ அருணாசலேசுவரர் அருளால் தோன்றிய மகவு ஆதல் பற்றி அருணாசலம் எனப் பிள்ளைத் திருநாமம் இட்டனர்.

அப்புதல்வனை மாதா பிதாக்கள் இருவரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர். மீனாம்பிகை அம்மையார் இரண்டாவது வருடத்தில் மீணடும் கர்ப்பமுற்று மற்றொரு புத்திரனைப் பெற்றனர். அப் புத்திரனுக்கும்,ஜாதக கன்மங்களை விதிப்படி செய்து நமச்சிவாயம் என நாமம் சூட்டி இருமைந்தர்களையும் மிக்க அன்புடன் பாதுகாத்து வளர்த்து வந்தனர்.

மூத்த குமாரனாகிய அருணாசலம் என்னும் அருமைக் குழந்தை பிறந்தது முதல் பசி முதலியன பற்றி உரோதனம்

செய்தலும்,ஒன்றை நோக்கிப் பயந்து ஒலியிட்டு அழுதலும், ஒன்றை நோக்கி சிரித்தலும் இலனாய்,பாயல் தொட்டில் முதுலியவற்றில் கண்களைச் சிலபோது மகிழ்ந்தும் சிலபோது மலர்த்தும்,ஒன்றையும் விசேடமாக உற்றுப் பாராமலும் மௌனமாகவும் சயனித்திருக்கும்

ஸ்ரீ அருணாசலேசுவரர் அனுக்கிர்கத்தால் பிறந்த குழந்தை ஐந்து வயதாகியும் வாய்திறந்து பேசாதிருப்பது குறித்து மாதா பிதாக்கள் இருவரும் மனவியாக்கூலமுற்றிருந்தனர். ஒரு நாள் ஸ்ரீ அண்ணாமலையண்ணல் கிருபை கூர்ந்து இவர்கள் மனக் குறையை நீக்கும் பொருட்டு, சடாமுடியும் துவராடையும்,விபுதி உருத்திராக்க தாரணமும் உடைய புனிதத் துறவியாக உருக்கொண்டு சிவ சிதம்பரம் பிள்ளை முன் தோன்றினார்.

சிவயோகியாரின் வரவால் சிந்தாகுலம் நீங்கிய சிவசிதம்பரம் பிள்ளை சிவயோகியாரின் முன் சென்று நமஸ்கரித்து கைகட்டி வாய் புதைத்து நின்று "ஸ்வாமி/ அண்ணாமலைப் பெருமானின் அனுக்கிர கத்தால் தோன்றிய அடியேனுடைய அருமைப் பாலகன் ஒருவன் ஐந்து வயதாகியும் பேசவில்லை அக்குழந்தை மாதா பிதா மனம் குளிர மழலைச் சொல் வழங்கும்படி அனுக்கிரகஞ் செய்ய வேண்டும்" எனப் பிராத்தித்து பின்னரும் அவர் திருவடியில் நமஸ்கரித்தனர்.

துறவராக வந்த பெருமான் "அந்த அற்புதக் குழந்தையை நாம் பார்ப்போம்" என்று அருளிச் செய்தலும், சிவசிதம்பரம் பிள்ளை சிவயோகியாரை வீட்டின் உள்ளே அழைத்துச் சென்று தம் தவப்புதல்வனைக் காட்டினார். அவ்வமயம் அக்குழந்தை ஆசனம் போட்டுக் கண்களை மூடி நிட்டையில் இருக்கக் கண்ட சிவயோகியார் சிவசிதம்பரம் பிள்ளையை நோக்கி " இக்குழந்தை

பெற்றோர்களாகிய உங்களையும் உங்கள் குலத்தார்களையும்,உலகத்தில் உள்ள பக்த ஜனங்களையும் நற்கதியில் சேர்க்கம் பொருட்டு உங்கட்குப் பிள்ளையாகத் தோன்றியிருக்கிறான். இவன் ஊமன் அல்லன்; இப்பொழுது நீவீர் உம் பாலகனோடு பேசுக" எனலும், சிவசிதம்பரம் பிள்ளை "அப்பா குழந்தாய்/ ஏன் கண்களை மூடிக் கொண்டிருக்கிறாய்?. என வினவினார். அதற்கு தெய்வீகக் குழந்தையான திருப்புதல்வன் சும்மா இருக்கிறேன் என விடை இறுத்தனன். துறவராகிய முனிவர் " சும்மா இருக்கிற நீ யார் என்றார் " ஞானக்குழந்தை தமது நிலை கலையாது முன் இருந்தபடியே முகிழ்த்த கண் திறவாமல் "நீயே நான் நானே நீ" எனப் பதில் இறுத்தது. இங்ஙனம் விடைப்பெற்ற முனிவர் "சத்தியம் சத்தியம்" எனக்கூறித் தம் திருவுருக் கரந்தனர் இவ்வற்புதத்தைக் கண்ணுற்ற மாதா பிதாக்கள் இருவரும், புத்திரனைப் பேசுவிக்கும்படியாக எழுந்தருளி வந்தவரும், புத்திரனாக விளங்குபவரும் உண்ணாமுலை உடன் ஆகிய ஸ்ரீ அண்ணாமலையண்ணலே எனக் கருத்திற் கொண்டு மிகுந்த பக்தி சிரத்தையுடன் திருவுளக் குறிப்பறிந்து போற்றி வந்தனர்.

நமசிவாயம் என்னும் இளைய மைந்தரைப் பள்ளிக்கு வைக்கும் பருவம் வந்தது. அதற்கு வேண்டிய சாமக்கிரிகைகளைச் சேகரித்துஉபாத்தியாயரை அழைத்து வந்து வித்தியாரம்பம் செய்விக்கத் தொடங்குங்கால் சுவாமிகள் பிதாவை நோக்கி"ஐயா/ நம்மை ஏன் பள்ளிக்கு வைக்கவில்லை? என்று வினவ, சிவசிதம்பரம் பிள்ளை ஸ்வாமிகள் முன் வணக்கமுடன் நின்று " சகலமும் தெரிந்த சர்வக்ஞராகிய ஸ்வாமிகளையும் பள்ளிக்கு அனுப்பிவைக்க வேண்டுமோ? வேண்டுமாயின் அங்ஙனமே ஏற்பாடு செய்கிறேன்" என்று வேண்டிய ஏற்பாடுகள் செய்து ஸ்வாமிகளளை முறைப்படி பள்ளியில் சேர்த்தார்.

அன்றைய நாள் முதலாக ஸ்வாமிகள் தம் தம்பியாகிய நமசிவாயத்துடன் பள்ளிக்குச் சென்று வருங்கால் பள்ளியில் மற்றப் பிள்ளைகளோடு சேர்ந்து இருப்பினும் அவர்களைப் போல் அல்லாமல் உபாத்தியாயர் இருப்பினும் இல்லாததிருப்பினும் தான் வேறு ஒன்றையும் நோக்கமால் சுவடியை கையில் ஏந்தியபடி பார்த்துக் கொண்டிருக்கும். சிலசமயம் சுவடியைக் கட்டித் தன் முன்பாக வைத்து விட்டுக் கண்ணை மூடிக்கொண்ட நிட்டையில் அமர்ந்திருக்கும் இவ்வாறு அமர்த்திருக்கும் ஸ்வாமிகளைப் பார்த்து உபாத்தியார், "தம்பி/ கண்களை மூடிக்கொண்டு இருக்கிறாயே,படிக்க வேண்டாமோ? " என்றால் ஸ்வாமிகள் "படித்தாயிற்று" என்று பதில் சொல்லும். " படித்ததைச் சொல் கேட்போம்" என்று உபாத்தியாயர் கேட்டால், ஸ்வாமிகள் சுவடியைப் பாராமல் பிழையின்றி ஒப்புவிக்கும்.

ஒரு நாள் ஸ்வாமிகள் உபாத்தியாயரை நோக்கி "ஐயா/ உங்கள் குழந்தை வீட்டுத் திண்ணையிலிருந்து கீழே விழுந்ததால் கை ஒடிந்து விட்டது; போய்ப் பார்த்து வாருங்கள்" என்று சொல்லிற்று. உபாத்தியாயர் உடனே எழுந்து வீட்டுக்குச் செல்லும் வழியில், அவரை அவசரமாக அழைப்பதற்காக வீட்டிலிருந்து வேலையாள் விரைந்து வந்தான். உபாத்தியாயர் அவனிடம் விஷயங்களை விவரமாக அறிந்து வீட்டுக்குச் சென்று காலம் தாழ்த்தாமல் குழந்தைக்கு வேண்டிய சிகிச்சைகளைச் செய்து முடித்து பள்ளிக்கு வந்து ஸ்வாமிகள் முன்பாக வணக்கமுடன் நின்று "சகலமும் உணர்ந்த சர்வக்ஞராகிய சுவாமிகள் பள்ளிக்கு வந்து படிக்கவேண்டிய காரணம் யாது உளது? ஏன் பள்ளிக்கு வரவேண்டும்?" என, ஸ்வாமிகள் "சும்மா வந்து போகிறேன் நீங்கள் நிற்க வேண்டாம் அமருங்கள்" எனத் திருவாய் மலர்ந்தது. என்றாலும் ஸ்வாமிகளுக்கு முன் தனது ஆசனத்தில் அமராமல் பூமியிற்றானே அமர்ந்தார். இவ்வாறு ஸ்வாமிகள் பள்ளிக்கு எழுந்தருளும் காலத்தில் உபாத்தியாயர் எழுந்து நின்று மரியாதை செய்வதும்,இருக்கும்படி உத்தரவு கிடைத்த பிறகே உட்காருவதும் வழக்கமாகி விட்டதைக் கண்ணுற்ற ஸ்வாமிகள் பள்ளிக்கு

வருவதை நிறுத்தி விட்டது. உலக வழக்கை அனுசரித்துப் பள்ளிக்குச் சென்று வந்தது மூன்று மாத காலமேயாகும்.

ஸ்வாமிகள் பல அற்புதத் திருவிளையாடல்கள் செய்துவரும் நாளில், பிதாவாகிய சிவசிதம்பரம் பிள்ளை ஸ்வாமிகள் முன்பாக வணக்கமுடன் நின்று, "ஸ்வாமின்/ எனது பாரியை மீனாம்பிகை பிரேதமாய்க் கிடக்க யான் பாராதிருக்கும் வரந்தரல் வேண்டும்" என்றும் ஸ்வாமிகளின் திருக்கரத்தாலேயே எனக்கு ஈமக்கடன்கள் முடிக்க வேண்டும்" என்றும் பிராத்திக் கொண்டனர். மீனாம்பிகை அம்மையாரும்,"சுமங்கலியாகவே தான் சரீரத்தைவிட வேண்டும் என்றும் தனக்கும் ஸ்வாமிகள் திருக்கரத்தாலேயே ஈமக் கடன்கள் செய்ய வேண்டும் "என்றும் கேட்டுக் கொண்டனள். ஒரு நாள் ஸ்வாமிகள் தாய் தந்தையரை அருகில் அழைத்து "இன்னும் எட்ட ாவது நாள் காலையில் நமது கருமம் முடிந்துவிடும்; நீங்கள் சிவ நாமத்தை உச்சரித்துக் கொண்டு சிவத் தியானம் செய்து வாருங்கள் " என்று அருளிச் செய்தது.

எதிர்பார்த்திருந்த எட்டாவது தினமும் விடிந்தது. ஸ்வாமிகள் இருக்கையைவிட்டு எழுந்து மாதா பிதா இருவர் நெற்றியிலும் திருநீறிட்டு அனுக்கிரகம் புரிந்தது. சிறிது நேரத்தில் இருவரும் மூர்ச்சையடைந்து கணப்பொழுதில் சிவபதம் சேர்ந்தனர். கூடியிருந்த சுற்றத்தார்கள் ஸ்வாமிகளின் திருக்குறிப்பின் உண்மையை ஓர்ந்து சிவசிதம்பரம் பிள்ளைக்கும் மீனாம்பிகை அம்மைக்கும் செய்ய வேண்டிய இறுதிக் கிரியைகளை முறைப்படி செய்து மயானத்துக்கு எடுத்து சென்று இருவருக்கும் ஒரே தானத்தில் சிதை அடுக்கித் தீ இடுதற்குத் தயார் செய்தனர். ஸ்வாமிகள் விதிப்படி ஸ்நானம் செய்து கொள்ளி எடுத்துக் கொண்டு சுற்றிவந்து தலைப்பக்கத்தில் வைத்து விட்டுத் தமது பெற்றோர் கடன் தீர்ந்தது என்று, கட்டிய வஸ்திரத்தோடு திரும்பிப் பாராமல் எவரும் அறியா வண்ணம் புறப்பட்டுத் தேசங்கள் தோறும் சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

ஸ்வாமிகள் கிராமங்களிலும் வனாந்தரங்களிலும், நதி

தீரங்களிலும் சஞ்சாரம் செய்து கொண்டு ஒரு நாள் தமது சகோதரராகிய நமசிவாய ஸ்வாமிகள் வசிக்கும் நீலப்பாடியைச் சேர்ந்தது.

நீலப்பாடியில் நமசிவாய ஸ்வாமிகள் அங்கு உள்ள பெரியார் ஒருவரிடம் 'சிவஞானபோதம்' பாடம் கேட்டு வந்தனர். ஒரு தினம் வழக்கம்போல் பாடம் நடந்து வரும் இடத்தில் ஸ்வாமிகளைக் கண்ட பெரியார், 'இவன் சைவ சமயத் தீக்கையில்லாதவனுமாக சிவபூசை அனுட்டானம் ஆகிய ஆசாரநியமங்கள் இல்லாதவனமாகக் காணப்படுகிறபடியால் . இவனுக்கு முன்பாக சாத்திர பாடம் சொல்லப்படாது என்று கருதி அன்றைய தினம் பாடம் நடத்தாமல் இருந்தனர். பெரியவருடைய உள்ளக்கிடக்கையை உணர்ந்த ஸ்வாமிகள் நமசிவாய ஸ்வாமிகளை அழைத்து ஐந்தோலையும் எழுத்தாணியும் கொண்டு வரும்படி செய்து ஓலைகளை வாரி ஏடாகச் சேர்த்து அதன்மேல் 'சிவஞானபோதச் சிந்தனம்' என்று எழுதியதுடன் அச்சுவடியில் சிவஞான போதத்தைச் சிந்திக்கும் முறையைத் தெளிவாக எழுதிக் கொடுத்து 'இதனை சிரத்தையுடன் சிந்தனம் செய்து வருவையேல், சிவஞான போத த்தை முறைப்படி சிரவணம் செய்தலினால் வரும் பயனை எளிதில் அடையலாம்' எனக் கட்டளையிட்டது. அக்கட்டளையைச் சிரமேற்கொண்ட நமசிவாய ஸ்வாமிகள் சுவடியைத் தமக்குச் சிவஞான போதப் பாடம் சொல்லி வரும் பெரியோரிடத்துக் காண்பித்தனர்.

பரம்பரையாகக் கற்றுணர்ந்து பெரியோர்களாலும் அறியப்படாததும் அநுபூதிமயமானதுமான அரும் பெரும் தத்துவங்களை வேத ஆகமவிரோதமின்றி எளிதில் விளங்குமாறு எடுத்துக் கூறியிருப்பதைப் பார்த்த சிவப்பெரியார் அதி ஆச்சரியமடைந்து சுவாமிகளின் பேராற்றலை வியந்து சிவானு பூதிச் செல்வராகத் திகழும் ஸ்வாமிகளை அற்பமாக மதித்து அபராதியானோமே என்று மனம் வருந்தி,உடல் பதற ஸ்வாமிகள் முன் சென்று அடிபணிந்து ;'அடியேன் அறியாது செய்த பிழையை மன்னித்தருள வேண்டும்' என்று பிராத்தித்துக் கொண்டனர். சில

காலம் அவ்விடமே தங்கியிருந்தார் சுவாமிகள்.

நாகப்பட்டினத்தில் சுவாமிகள் சில நாட்கள் இருந்தபோது நாள்தோறும் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து வருவதைக் கண்ட ஸ்வாமிகள் அவ்விடம் வருவதைக் கண்ட ஸ்வாமிகள் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் திருவாரூர் வன்மீகபுரம் வந்து, அங்குள்ள சோமநாத ஸ்வாமி கோவிலிலும்,பக்கத்தில் உள்ள ஓடம் போக்கி,ஆற்றின் படுகையிலும், சில சமயம் கரையில் உள்ள விருட்சங்களின் அடியிலும் தங்கியிருந்தது.

சோமநாத முதலியார் என்பார் நெடு நாட்களாகக் குன்மநோயால் வேதனைப்பட்டார். சிதம்பரம் வந்து அங்கு பிராணத்தியாகம் செய்து கொள்ள முற்பட்டு,அசரீரி வசனம் கேட்டு அதன்படி திருவாரூர் வந்து ஆலயத்துள் தக்ஷிணாமூர்த்தியின் திருச்சந்நிதியில் அமர்ந்திருந்தார். ஸ்ரீ நடராஜப் பெருமான், அவர்கனவில் தோன்றி தக்ஷிணாமூர்த்தி எனும் பெயருடையவன் இவ்வூரில் நிர்வாணமாக சுற்றித் திரிகிறான்.அவனிடம் செல்வாயாக"என்று அருள் புரிந்தார்.ஸ்வாமிகளைத் தேடி அடைந்து பரிகலச்சேடம் பெற்று உட்கொண்டு அவரது தீராத நோய் இருந்த அறிகுறியே இல்லாது மறைந்தது. இதைப் பலரிடத்தும் விவரமாகச் சொல்லி,தில்லை நாயகர் திருவாய் மலர்ந்த வண்ணம் திருமேனி கொண்டு எழுந்தருளிய தக்ஷிணாமூர்த்தியே இவர் என்று நிச்சயித்துத் தோத்திரம் செய்து வந்தார்.

ஸ்வாமிகளின் அருமை பெருமைகளை உணர்ந்த எல்லோரும் அந்நாள் முதற்கொண்டு "தக்ஷிணாமூர்த்தி ஸ்வாமிகள்" என்றே போற்றிப் பாராட்டி வந்தனர்.

மடப்புரம் கவரையர் தெருவில் உள்ள பல அன்பர்கள் பழநியப்ப ஸ்வாமிகள் என்பவரின் பற்றற்ற தன்மையையும் ஸ்வாமிகளுக்குப் பணி விடை செய்துவரும் சிரத்தையையும் கண்டு, "நாங்கள் திரவியம் தருகிறோம் தக்ஷிணாமூர்த்தி ஸ்வாமிகளுக்கு இப்பொழுதே சமாதி ஆலயம்

அமைக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். பழநியப்ப ஸ்வாமிகளும் சம்மதிக்க ,ஸ்வாமிகளின் திருவுளக் குறிப்பு அறிந்து வேலை துவங்கியது.

ஆலயம் அமைக்கவிருக்கும் செய்தி ஊரேங்கும் பரவலாயிற்று.திருவாரூர் பாவாமுதலியார் முதலிய தனவான்களும்,திருவாரூரிலும்,பக்கத்து ஊர்களிலும் உள்ள மிராசுதார்களும்,ஊர்ஜனங்களும் தாமாக முன் வந்து,பணம், செங்கல், கருங்கல், சுண்ணாம்பு ஆகியவற்றை வழங்கினர். ஸ்வாமிகளைத் தரிசிக்க வருபவர்கள் செலுத்திவரும் பாத காணிக்கைப் பொருள்களும் சேர்ந்தன. பழநியப்ப ஸ்வாமிகள் முன்னின்று கர்ப்பக்கிருஹம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், சுற்றுப்பிரகாரம், பத்தி மண்டபம், கோபுரம்முன்மண்டபம், படித்துறை முதலான திருப்பணிகள் செய்து ஸ்வாமிகள் ஐக்கியம் அடைந்த பின்னர் கர்ப்பக் கிருஹத்துள் சமாதி வைப்பதற்கான குகையும் சுரங்க வழியும் அமைத்து, தஞ்சாவூர் சரபோஜி மன்னர் காசியில் இருந்து கொண்டு வந்து கொடுத்த பாணலிங்கத்தைக் கர்ப்பக் கிருஹத்தில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தனர். அது முதல் நித்திய நைமித்திக பூஜைகளும் சிறப்பாக நடந்துவரலாயின.

உள்ளன்புடன் ஸ்வாமிகளை அடைந்தவர்களுக்கு வேண்டுவோர் வேண்டியபடி ரோக நிவாரணம்,புத்திர சந்தானம்,திரவிய சம்பத்து ஞான சம்பத்து முதலான அனுக்கிரகங்கள் செய்து கொண்டும் பக்குவம் வந்தவர்க்குப் பேரானந்த நிலையை அளித்தும் அற்புதச் செயல்கள் செய்து கொண்டு ஸ்வாமிகள் சகஜ சமாதியினராக இருந்து வந்தது.

ஒரு நாள்,மஹா மண்டபத்தில் அழகுபெற அமைக்கப் பெற்றிருந்த ஆதனத்தில் ஸ்வாமிகள் வழக்கம்போல் அமர்ந்து,முடிந்தது/ முடிந்தது/ முற்றிலும் முடிந்தது /// என்று திருவாய் மலர்ந்து நிட்டை கூடினர். திருவடித் தொண்டராகிய பழநியப்ப ஸ்வாமிகள் இக்குறிப்பின் மூலம் ஸ்வாமிகள் விதேக

முத்தி அடையுங்காலம் சமீபித்து விட்டதென உணர்ந்து பல்வேறு இடங்களில் உள்ள பக்த கோடிகளுக்குச் செய்து அனுப்பினார். பக்தர்கள் தரிசித்துக் கொண்டிருக்கும் போது நிட்டை கூடிய எட்டாம் நாள் கலி 4936 மன்மத வருடம் ஆவணி மாதம் பனிரெண்டாம் தேதி புதன்கிழமை பூர்வபட்சம் திருதியை தி தி உத்திர நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் பகல் 12 மணி அளவில் பக்தர்கள் கூட்டம் கடல்போல் நிறைந்து விளங்க, ஸ்வாமிகள் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சிவசொருபத்தில் கலந்து கைவல்ய மடைந்தது. ஸ்வாமிகள் திருமேனிக்கு விதிப்படி அபிஷேகம் அலங்காரம் ஆராதனை முதலியன செய்வித்து ஆலயத்தல் முன்னரே தயார் செய்து வைத்திருந்து சமாதி குகையில் எழுந்தருளச்செய்தனர். அன்று தொட்ங்கி இன்று வரை சரியாக அரே உச்சிவேலை 12 மணிக்கு பகல் பூசையும், இரவு 8 மணிக்கு சாயங்கால பூசையும் தவறாது நிகழ்நது வருகிறது.

நன்றி

1994-ம் ஆண்டு துறவும் தொண்டும்

சிறப்பு மலர் வெளியீடு.

ஸ்ரீ ராமஜெயம் பிரிண்டர்ஸ், திருவண்ணாமலை. Ph: 22158